**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண்.83/2020</u>**

**நாள்– 03.06.2026**

**வா.சா. 2 – திரு. தியாகராஜன், கிராம நிர்வாக அலுவலர், எலந்தக்குட்டை**

**<u>முதல் விசாரணை:</u>**

1) நான் எலந்தகுட்டை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் எலந்தகுட்டை கிராமம், சர்வே எண்.183/1ல் சரியான உட்பிரிவுகள் பற்றி ஆவணங்களுடன் சாட்சியமளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.183/1 நிலத்தினை நேரில் பார்வையிட்டேன். சர்வே எண்.183/1ல் மனுதாரரின் நிலம் தற்போதைய சர்வே எண்.183/6J1 ல் அமைந்துள்ளது. மனுதாரர் நிலமான சர்வே எண்.183/6J1 தற்போதைய செக்குபந்தி 20 அடி ரோட்டுக்கும் கிழக்கு, NH ரோட்டிற்கும் மேற்கு, சுரேஷ் பூமிக்கும் வடக்கு, குருசாமி பூமிக்கும் தெற்கு ஆகும்.

**<u>3ம் தரப்பு பிரதிவாதியின் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை.

**(மறுவிசாரணை இல்லை)**